# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 9செவ்வாய்க்கிழமை (23 06 1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:177


### மின்மாற்றி தகர்ப்பையடுத்து

## 100 தமிழர்கள் வரை இரத்தினபுரியில் கைது!

கொழும்பு, ஜூன் 23

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் மின்மாற்றித் தகர்ப்பு சம்பவங்கள் தொடர்பாக சுமார் 100 தமிழர்கள் இரத்தினபுரி தலைமையகப் பொலீஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய 8 பேர் அடங்கியுள்ளனர் என பொலீஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, போரதீவு உட்பட வடக்கு – கிழக்கின் பல பகுதிகளில் இருந்து இவர்கள் இரத்தினபுரி வந்துள்ளனர் எனவும் —

இரத்தினபுரியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடைச்சிப்பந்திகள் என்ற போர்வையில் இவர்கள் பணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப்பகுதியில் நேற்று பெரும் படை நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று படையினர் ஆரம்பித்த ''இந்திரசர'' என்ற பெரும் இராணுவ நடவடிக்கையின் பேபது புலிகளின் முக்கிய தளமாகவிளங்கிய வாகரைப் பகுதியை துருப்புக்கள் மீட்டனர்.

படை வட்டாரங்கள் நேற்று இவ்வாறு அறிவித்தன.

### ராணுவத்தரப்பு அறிவிப்பு

படைத்தரப்பில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடற்படையும், விமானப் படையும் இத் தாக்குதலுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

''ஆரம்பத்தில் கடும் எதிர்ப்புக் காட்டிய புலிகள் பின்பு பின்வாங்கிச் சென்றனர்.''

'புலிகளின் பிரதான தளத்தையும் சிறிய நிலைகளையும் படையினர் தாக்கியபோது 33 புலிகள் உயிரிழந்ததாகவும், நூற்றுக்கும் அதிகமா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரண வெட்டை ஆட்சேபித்து நாடாளுமன்றை பகிஷ்கரிக்க தயார்!

## டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

''யாழ். மாவட்டத்தில் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை வெட்டும் அரசின் முடிவை செயற்படுத்த விடாமல் தடுப்பதற்கு எம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கின்றோம். தேவைப்பட்டால் எமது முழு எதிர்ப்பைக் காட்டுவதற்காக நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து போராட்டம் நடத்தவும் தயாராக உள்ளோம்''

ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தில் நலிவுற்றிருக்கும் யாழ், மக்களின் வயிற்றில் அடிப்பது போல நிவாரண வெட்டு நடவடிக்கை அமைகின்றது. இச் செயல் ''பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது''போன்றதாகும்.

பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முடியாது விவசாயி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் கைதானோரில் 13 பேர் அ'புரம் நீதிமன்றில் ஆஜர்!

கொழும்பு, ஜூன் 23

கடந்த ஜனவரி இறுதியிலும் மார்ச் மாத முற்பகுதியிலும் குடாநாட்டில் கைது செய்யப்பட்டோரில் மூன்று பெண்கள் உட்பட 13 பேர் நேற்று அனுராதபுரம்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர். எட்டுப் பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். மூவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

நல்லையா பிரதீபன்(மட்டுவில்),ராமு ஆனந்த சுந்தரம் (சுன்னாகம்) ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டனர்.

பிணையில் விடுவிக்கப்பட்ட 8 பேரின் விவரம் வருமாறு:-

★ வெள்ளையன் ரட்ணசிங்கம் (ஆவரங்கால்).

★ சின்னத்துரை ஞான

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் கொலரா!

## உயிலங்குளம் ஊடான போக்குவரத்து நிறுத்தம்!

வவுனியா, ஜூன் 23

வவுனியா நகரில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து உயிலங்குளம் ஊடாக பயணிகள் வவுனியாவுக்கு வருவது இன்று முதல் இடை நிறுத்தப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வந்து வவுனியா முகாமில் மூன்று மாதங்கள் தங்கியிருந்த சங்கரப்பிள்ளை தியாகராசா (வயது 27) என்ற இளைஞர் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் வாந்திபேதி பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதை அடுத்து சுகாதார வாரம் அனுஷ்டிக்க சுகாதாரப் பகுதியினர் ஏற்பாடு செய்யவுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மகப்பேற்று வார்ட் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ், போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று வார்ட் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். நகரப் படைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் அதனைத் திறந்து வைத்தார்.

(10 ஆம்பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை ஊழியர் இன்று வேலை நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இதுவரை கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படாதது குறித்து ஊழியர்களின் மனவேதனையை தெளிப்படுத்துவதற்காகவும்—

இது விடயத்தில் அரசின் பாராமுகம் யாழ். பல்கலைக் கழக நிர்வாகத்தின் மெத்தனப் போக்கு ஆகியவற்றைக் கண்டித்தும்—

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தவுள்ளது.

இன்றைய வேலை நிறுத்தத்துக்கு யாழ். பல்கலைக் கழக எழுதுவினைஞர், தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியமும், நிறைவேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலை ஊழியருக்கு

## கஷ்ட நிவாரணம் வழங்க ஆணைக்குழு இணக்கம்?

கொழும்பு, ஜூன் 23

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணப் படியை வழங்க பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் கோரிக்கை தொடர்பாக ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, ஈ. பி. டி. பி. பேச்சாளர் எஸ். தவராஜா ஆகியோர் கல்வி உயர் கல்வி அமைச்சினதும், பல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். யுவதியின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 23

வவுனியாவில்கடந்தமூன்று நாள்களாக காணாமற் போனதாகக் கருதப்பட்ட இளம் பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதுரநாயகம் சுதர்சினி (வயது 22) என்றஇளம் பெண்ணே கிணற்றில் இருந்து மீட்கப்பட்டார்.

இவரது மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார், இந்த இளம் பெண் லவுனியா வேப்பங்குளம் முகாமில் தங்கியிருந்த பொழுது அங்கு கடமையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தணிக்கை

யுத்தச்செய்திகளுக்கான தடை உத்தரவு காரணமாக பிரசுரத்துக்கு முன் அனுமதி பெறாத இராணுவச் செய்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ-ர்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்புப் பிரச்சினைகள் கருதி

# மாகாணத் தேர்தலை வெவ்வேறு தினங்களில் நடத்த ஆலோசனை

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் பட்சத்தில் அவற்றை ஒரே நாளில் நடத்துவதால் ஏற்படக் கூடிய பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களை சமாளிப்பதற்காக வெவ்வேறு நாள்களில் தேர்தல்களை நடத்துவது குறித்து அரச மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு — யுத்தம் காரணமாக தேர்தலை ஒத்திவைப்பதற்காக அரசு ஏனைய அரசியல் கட்சிகளுடன் கருத்துக்களைப் பரிமாறிய போதிலும் சாதகமான பெறுபேறு எதுவும் கிடைக்கவில்லை.

★ மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு தேர்தல் சட்டத்தில் இடம் இல்லை.

★ அப்படி ஒத்திவைக்கப்பட வேண்டுமானால் அவசரகால சட்ட விதிகளின் பிரகாரம்தான் முடிவு செய்ய முடியும்.

அவசரகாலச் சட்டம் நாடெங்கும் விஸ்தரிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பமாட்டார் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

தேர்தல் கடமைகளுக்காக 10 ஆயிரம் பொலீஸார் யுத்தப் பிரதேசத்திலிருந்துதான் வரவழைக்கப்பட வேண்டும்.

வெவ்வேறு நாள்களில் தேர்தல்கள் நடைபெறுமானால் 2 ஆயிரத்து 500 முதல் 3 ஆயிரம் பொலீஸார் போதுமானதாகும்.

இப் பொலீஸாரை சுழற்சி முறையில் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்த முடியும் என்ற அபிப்பிராயம் அரசுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

---

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சங்க

### ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி கூட்டம் 1998-07-12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு (இலங்கை நேரம்) யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். பெற்றோர் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்.
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(சி/4096)

---

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் பொன்னம்மா

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலடியைச் சேர்ந்த இராசரத்தினம் பொன்னம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் சரவணபவன் (மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்), விக்கினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ச. பொ. கந்தசாமி, திருமதி இரத்தினம் மற்றும் ச. பொ. மயில்வாகனம், ச. பொ. தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராதேவி சாந்தினி, சிராணி, வசந்தநாயகி, இராஜேஸ்வரி, மாலானி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. சரவணபவன்
இ. விக்கினராசா
(மகன்மார்)

(55440)

### தம்பர் சின்னத்தம்பி

களுவாக்கட்டை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பர் சின்னத்தம்பி 21.06. 1998 அன்று தொட்டிலடி, சங்கானையில் காலமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும், லீலாதேவி, கமலாதேவி (கனடா), புஸ்பராணி (திருகோணமலை), சொக்கலிங்கம் (பிரான்ஸ்), வசந்தாதேவி (பிரான்ஸ்), மல்லிகாதேவி (ஆசிரியை க. பு. ம. வி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவசுப்பிரமணியம், ராஜ்குமார் (கனடா), இராஜரஞ்சன் (சிறைச்சாலை உத்தியோகஸ்தர்), பிறேமாவதி (பிரான்ஸ்), தயாளன் (பிரான்ஸ்), ஞானேந்திரன் (சுவிஸ்), திருநாவுக்கரசு தவமணிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இராஜரஞ்சன்.

தொட்டிலடி,
சங்கானை.

(சி/4092)

### சைவப்புலவர்
### ச. சச்சிதானந்தசிவம்

(அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவரும், இளைப்பாறிய அதிபரும்)

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சைவப்புலவர் பண்டிதர் ச. சச்சிதானந்தசிவம் அவர்கள் 21-06-98 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி சண்முகம் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி ச. பராசக்தியின் அன்புக் கணவரும், திருமதி சு. நிர்மலாதேவி திருமதி பா. சத்தியபாமா, சிறீதரன், சுலோசனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வி. சுந்தரமூர்த்தி, ச. பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வன் கபிலன், தசாங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும், இ. பரமகுருவின் சகலனும், திருமதி ப. பரமேஸ்வரியின் மைத்துனரும், செல்வி பகுரூபா, ஜெயரூபா, சிவரூபா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஏழாலை மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக இன்று (23 - 06 - 98) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு ஏழாலை உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சுந்தரமூர்த்தி
(மருமகன்)

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(57058)

---


### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

2 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த

**பாட்ஷா**

தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/3917)

### நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.
அகல வெண் திரையில்
23-06-98 செவ்வாய் முதல்
விஜயகாந்த் - வினிதா
நடித்த

**பதவிப் பிரமாணம்**
(C. D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30

(57065)

### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

புதன்கிழமை வரை
காதல் மன்னன்
ஜெமினிகணேசன்
சரோஜாதேவி
தங்கவேலு நடித்த
**கல்யாணப் பரிசு**

வியாழன், வெள்ளி
அஜித்குமார் - சிம்ரான்
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**அவள் வருவாளா**

நேரம்:- 10-30, 2-30
(புதிய நேரம்)
Tele. No: 070 212283

(56999)


---

## நேர்முகப் பரீட்சைக்கு

# தாமதித்து வந்துசேர்ந்த அழைப்புக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கை உயர்தர தொழில்நுட்ப நிறுவனங்களில் நிரந்தர விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் கால தாமதமாகக் கிடைத்தமையால் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 100 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை. இதனால் தற்போது நடந்துகொண்டிருக்கும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு பெரும்பாலான விண்ணப்பகாரிகள் தோற்றமுடியாத நிலையிலுள்ளனர்.

பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. யின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களின் வசதி கருதி இன்னுமொரு திகதியில் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு ஒழுங்குசெய்து உதவுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உயர்கல்வி அமைச்சுடன் கலந்தாலோசித்து இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

(ஐ-5-6)

## பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 23

லயன் றெமன் முத்தையா ஞாபகார்த்த தங்கப்பதக்கத்துக்கான தமிழ், ஆங்கிலபேச்சுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இன்றுவரை ஏற்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆங்கில பேச்சுப் போட்டி நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும்—

தமிழ் பேச்சுப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியிலும்—நடைபெறவிருப்பதாக லியோத் தலைவர் பா. தவபாலன் அறிவித்துள்ளார்.

(இ-3,

---

உ

ஆவரங்கால் சிவன்கோயில்

### ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானம்

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

26 - 06 - 1998

சிவநேயச் செல்வர்களே!

ஷெ தேவஸ்தானத்தில், வெகுதானிய வருடம் ஆனி மாதம் 12ஆம் நாள் 26 - 06 - 1998 வெள்ளிக்கிழமையும் புனர்பூசம் நட்சத்திரமும் துதியை திதியும் வெள்ளி ஓரையும் அமையும் காலை 6-40 நிமிஷம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். அந்நேரமும் அதற்கு முன்பும் பின்பும் நடைபெறும் கிரியா காலங்களிலும் பேரருளுக்குள்ளாகுமாறு வேண்டுகிறோம்.

கிரியாகாலம்

22 - 06 - 98 ஆனி 8 ஆம் திகதி திங்கட்கிழமை
பகல் 12. 00 மணி விநாயக வழிபாடு பிராமண அனுஞ்ஞை கணபதி ஓமம்.

23 - 06 - 98 ஆனி 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
காலை 8 மணி திசா ஓமம், மூர்த்தி ஓமம், நவக்கிரக ஓமம், வாஸ்துசாந்தி.

24 - 06 - 98 ஆனி 10 ஆம் திகதி புதன்கிழமை
காலை 9 மணி யந்திர பூசை, கங்கா பூசை, சூரிய அக்கினி சங்கிரணம்.
மாலை 4.00 மணி மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் ரட்சாபந்தனம், கடஸ்தாபனம், கும்ப யாக சாலா பிரவேசம் யாகபூஜை.

25 - 6 - 98 ஆனி 11 ஆம் திகதி வியாழக்கிழமை
காலை 6. 38-7. 15 தூபிஸ்தாபனம், விம்பஸ்தாபனம் அஷ்டபந்தனம்.
காலை 10. 00 மணி முதல் 5. 00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்.

26 - 6 - 98 ஆனி 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 5.30மணி தூல லிங்க தூபி அபிஷேகம்
6. 40 மணி மூலாலய பிரவேசம் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெறும்.

-- தர்மகர்த்தா சபையினரும்,
திருப்பணிச் சபையினரும்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**சாரங்கா நகைமாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அருள்முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிவா நகைமாடம்**
யாழ். வீதி, சாவகச்சேரி.

(சி/4094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரங்கில்

# கிழக்குத் திமோர் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சர்வஜன வாக்கெடுப்பு

## கெரில்லா தலைவர் குஸ்மாவோ கோரிக்கை

ஜகார்த்தா, ஜூன் 23

கிழக்குத் திமோர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கிழக்குத் திமோர் கெரில்லாத் தலைவர் சனானா குஸ்மாவோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தோனேசியாவில் தற்பொழுது ஆட்சியிலிருக்கும் புதிய அரசாங்கம் கிழக்குத் திமோர் மக்களுக்குப் பெரிய அளவில் சுயாட்சி வழங்கப் போவதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

கிழக்குத் திமோரில் வாழும் மக்கள் தமது பகுதிக்கு தனி நாடுகோரிப் பல வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

இந்தோனேசிய அரசாங்கம் தற்பொழுது அறிவித்துள்ள சுயாட்சி அதிகாரங்கள் போதுமானவை அல்ல என்றும் —

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் கிழக்குத் திமோர் மக்கள் தமது சுயநிர்ணய உரிமை குறித்து தீர்மானிப்பது மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று கிழக்குத் திமோர் கெரில்லாத் தலைவர் குஸ்மாவோ அறிவித்துள்ளார். (இ)

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

பாரிஸ், ஜூன் 23

பிரான்ஸில் நடைபெறும் 16 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இலங்கை நேரப்படி இன்றிரவும், நாளை அதிகாலையும் நான்கு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஆட்ட விவரம் வருமாறு:-

★ இரவு 8 மணி — இத்தாலி எதிர் ஆஸ்திரியா.

★ இரவு 9.45 மணி — சிலி எதிர் கெமரூன்.

★ அதிகாலை 1 மணி — பிரேசில் எதிர் நோர்வே.

★ அதிகாலை 3.45மணி— ஸ்கொட்லாந்து எதிர் மொறாக்கோ. (இ-ரீ)

## 3 கோல்களைப் போட்டு ஆர்ஜென்ரீனா அணித் தலைவர் சாதனை

பாரிஸ், ஜூன் 23

பாரிஸில் நடைபெறும் உலகக்கிண்ண உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஆர்ஜென்ரீனா அணித்தலைவர் கபிரியேல்பாடிஸ்டுடா மூன்று கோல்களைப் போட்டு 'ஹட்ரிக்' சாதனைபுரிந்தார்.

ஜமேய்க்கா அணிக்கு எதிராக நடந்த ஆட்டத்திலேயே அவர் இச்சாதனையை நிலைநாட்டினார்.

இந்தச் சுற்றுப்போட்டியில் அவரே முதல் முதலாக ஓர் ஆட்டத்தில் 3 கோல்களைப் போட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1958 ஆம் ஆண்டு சுவீடனுக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் பிரேசில் வீரர் பீலே கோல்கள் போட்டதும்.—

1986 ஆம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நடந்த போட்டியில் ஆர்ஜென்ரீனா வீரர் மரடோனா கோல்கள் போட்டதும்—சிறந்த கோல்கள் என அப்போது சர்வதேசக் கால்பந்து சம்மேளனம் பிரகடனம் செய்திருந்தது. (இ-3-ரீ)

## ஈரானிடம் அமெரிக்கா தோல்வி

பாரிஸ், ஜூன் 23

பிரான்ஸில் நடைபெறும் 16ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற அமெரிக்க-ஈரான் நாடுகளுக்கிடையேயான போட்டியில் ஈரான் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் ஈரான் பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும்.

ஜேர்மனிக்கும், யூகோஸ்லாவியாவுக்கும் இடையில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் போட்டதால், ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஆர்ஜென்ரீனாவுக்கும், ஜமேய்க்காவுக்கும் இடையில் நடந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா ஐந்து கோல்களைப் பெற்று லாவகமாக வெற்றி பெற்றது. (இ-3-ரீ)

## சுத்தமாக வைத்திருப்பதில் ஜப்பானியர் முன் மாதிரி!

பாரிஸ், ஜூன் 23

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பல நாடுகள் கலந்து கொள்வதும், அந்த நாடுகளின் ரசிகர்கள் பெரும் செலவு செய்து அந்தப் போட்டிகளை நேரடியாகப் பார்க்க வருவதும் வழமை.

வருபவர்கள் ஆட்டத்தை ரசிக்கும் அதே வேளையில் தின் பண்டங்களையும் ருசித்தவண்ணமே இருப்பார்கள்.

இதனால் பார்வையாளர்கள் தங்கி இருக்கும் பகுதியில் குப்பை கூழங்கள் அதிகமாகக் காணப்படும்.

ஒரு முறை நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் ஜப்பான் நாடும் பங்கு பற்றியது. இதனால் ஜப்பான் நாட்டு ரசிகர்கள் பெருமளவில் வருகை தந்து ஒரு பகுதியில் அமர்ந்திருந்தனர். போட்டி நடைபெற்ற போது ஏனைய ரசிகர்களைப் போல ஜப்பான் ரசிகர்களும் நொறுக்குத்தீனிகளை ஒரு கை பார்த்துக்கொண்டே இருந்தனர்.

போட்டி முடிவடைந்ததும் பார்வையாளர் அரங்கைச் சுத்தம் செய்யச் சென்ற தொழிலாளர்களுக்கு பெரும் அதிர்ச்சி.

ஜப்பான் ரசிகர்கள் இருந்த பகுதி மிகவும் சுத்தமாக இருந்தது.

தொழிலாளர்கள் ஜப்பான் ரசிகர் ஒருவரைப் பார்த்து இதுபற்றிக் கேட்டபோது அந்த ரசிகர் சொன்ன தகவல் — ''நாம் எங்கு சென்றாலும் எந்த நாட்டுக்குச் சென்றாலும் சுத்தம் பேணுவதில் கவனம் செலுத்துவது வழக்கம்,

எனவே தான் நாம் எமது நாட்டிலிருந்து வரும் போது குப்பைகளைப் போடுவதற்கு குப்பைத்தொட்டிகளையும் எடுத்து வந்திருந்தோம்'' என்றார். (ஐ-9)

## 3 பொலீஸார் உட்பட அறுவர் சுட்டுக்கொலை

### கராச்சி நகரில் சம்பவம்

இஸ்லாமாபாத் ஜூன் 23

பாகிஸ்தானின் கராச்சி நகரில் மூன்று பொலீஸ் உத்தியோகத்தர் உட்பட6 பேர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டனர்.

கராச்சியின் கிழக்குப் பிரதேசத்தில் ஜீப் ஒன்றில் பயணம் செய்தவர்களே இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இக்கொலைகளை இந்திய ''றோ'' அமைப்பே செய்தது என பாகிஸ்தான் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார். (இ-ரி)

## இஸ்ரேல் நடவடிக்கை

டெல்அவில், ஜூன் 23

பலஸ்தீனத்தின் சர்ச்சைக்குரிய பகுதியான நெஸ்லின் பகுதியை சிறப்பு நகர சபையாக விரிவுபடுத்த இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

யூதர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், இஸ்ரேலின் அரசியல் வலுவாக்கத்தை அதிகரிக்கவுமே இந்த நடைமுறை என பலஸ்தீனம் குற்றம் சாட்டியுள்ளது. (இ-ரி)

## யெல்ட்சின் கோரிக்கை

மொஸ்கோ, ஜூன் 23

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளை நீக்கி கியூபாவுடன் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என ரஷ்யப் பிரதமர் யெல்ட்சின் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-ரி)

## லேசர் அணு உலை

புதுடில்லி, ஜூன் 23

தமிழ் நாட்டில் இரண்டாயிரம் மெகோவாட் லேசர் அணு உலைகளை ஏற்படுத்துவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் ரஷ்யாவும், இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளன. (இ-ரி)

## பிரேஸிலுக்கு அதிர்ஷ்ட எண் - 13

பாரிஸ், ஜூன் 23

பொதுவாக 13 என்ற எண் அதிர்ஷ்டமில்லாத எண் என நம்மில் சிலர் கூறுவதுண்டு.

ஆனால் பிரஸிலைப் பொறுத்தவரை 13 தான் அதிர்ஷ்டமான எண் போலும் பிரேஸில் அணியின் பயிற்சியாளர் ஜகல்லோ திருமணம் செய்தது 13 ஆம் திகதி. ஜகல்லோ பிறந்த வருடத்திலும் 13 வருகிறது. அதாவது வருஷத்தின் எண்ணைத் திருப்பிப் பார்க்க வேண்டுமாம் அவர் பிறந்த வருடம். 1931 அவருடையகாரின் எண்ணும் 13 தான் (1003) பிரேஸில் முதன் முதலில் உலகக் கிண்ணத்தை வென்றது 1958 இல், 58 ஐக் கூட்டினாலும் 13 தான் வரும். 1994 ஆம் ஆண்டு பிரேஸில் உலகக் கிண்ணத்தை வெல்லுவதற்கு (9+4=13) 13 எண் கூட்டுத்து தொகையாக வந்தது காரணமென ஜகல்லோதிடமாக நம்பினார்.

ஜகல்லோவின் நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தியது இம் மாதம் 16ஆம் திகதி நடந்த பிரேஸில்— மொறோக்கோ அணிகளுக்கிடையிலான ஆட்டம் எனவும் கூறுகிறார்கள். ஏனென்றால் 16 ஐ கூட்டவருவது 7. போட்டிகள் நடந்த மாதம் 6. எனவே கூட்டவருவது 13. இதை வைத்துக் கொண்டு இப் போட்டியில் பிறேஸில் வெல்லும் என அதன் பயிற்சியாளர் ஜகல்லோ உறுதியுடன் கூறினார். அதே போல - 16 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் பிரேஸில் 3 — 0 என் கோல்கணக்கில் மொறோக்கோவை தோற்கடித்தது. (இ-ரீ)

## உலகக் கிண்ணத் துணுக்குகள்

FRANCE 98

### மரடோனா மீது வழக்கு

ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மரடோனா 1994 ஆம் ஆண்டு பத்திரிகையாளர்களை நோக்கிச் சுட்டது தொடர்பாக அவர்மீது போஸ் அயர்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் மரடோனாவுக்கு 4 வருட கடுழிய சிறைத்தண்டனை வழங்க வேண்டுமென வழக்கறிஞர்கள் வாதாடினர். ஆனால் கடந்த வாரம் மரடோனாவுக்கு 2வருட சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்மனித்துள்ளார்.

ஆனால் மரடோனாவோ தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளராக பிரான்ஸில் உள்ளார்.

### ரசிகர்களின் சைக்கிள் பயணம்

யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த இரண்டு உதைபந்தாட்ட ரசிகர்கள் பாரிஸுக்கு இரண்டாயிரம் கிலோ மீற்றர் தூரம் சைக்கிளில் பயணம்செய்துள்ளனர்.

உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் யூகோஸ்லாவிய அணிக்கு தமது நாட்டுக் குழந்தைகளின் நல்வாழ்த்துக்களுடன் இருவரும் கடந்த வாரம் பாரிஸ் வந்து சேர்ந்தனர்.

## ஈராக் அரசு மீதான தடை தளர்த்தப்படும் அறிகுறி!

பாக்தாத், ஜூன் 23

ஈராக் மீதான ஐ. நா. பொருளாதாரத் தடை தளர்த்தப்படக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

ஈராக்கின் சர்ச்சைக்குரிய ஆயுதக் கிடங்குகள் சம்பந்தமாக ஐ. நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கும் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்னுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1990 இல் குவைத் நாட்டின் மீது ஆக்கிரமிப்பு மேற்கொண்டதுக்காக ஈராக் பொருளாதாரத் தடைகளை அனுபவித்து வருகிறது.

இம்மாதம் 14ஆம் திகதி ஏற்பட்டுள்ள இணக்கம் ஈராக்குக்கு புத்துயிர் தந்திருகிறது.

இதற்கு இணங்க ஈராக் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரத் தடைகளைக்களைய ஈரான் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென ஈராக்கின் துணைப்பிரதமர் தாரிக் அசீஸ் ஐ. நா சிறப்பு ஆணையாளர் றிச்சர்ட்பட்லரிடம் கேட்டுள்ளார்.

ஈராக் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்படக் கூடிய இந்த இணக்கத்தினால் ஈராக் இனி வெளி நாடுகளுக்கு பெற்றோலைத் தாராளமாக விற்கமுடியுமெனவும் —

அதன்மூலம் சிதறியிருக்கும் ஈராக் பொருளாதாரத்தை சீர் செய்யமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அப்புத்துரை சிறிரஞ்சனி சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் என்பவரது விசேட அடையாள அட்டை (090403692) சண்டிலிப்பாய்ப் பகுதியில் தொலைந்துவிட்டது. கண்டெடுவர்கள் மேற்படி விலாசத்திலோ அல்லது சுழிபுரம் யா/விக்ரோறியாக் கல்லூரியில் ஒப்படைக்கவும்.

[57053]

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்தி சமீபம்.

[57007]

## தட்டுப்பாடு

நெடுந்தீவு, ஜூன் 23
நெடுந்தீவில் தேங்காய்க்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

(இ-111)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 23
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன் கிழமை முற்டகல் 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் க. நாகராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலயம் 2 இன் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கலந்து கொள்வார்.

(இ)

## கட்டாக்காலிகள்

நெல்லியடி, ஜூன் 23
மந்திகை மருத்துவமனை வளவில் உட்புகும் கட்டாக்காலி மாடுகள் அங்குள்ள வாழைகளையும் பயன்தரு மரங்களையும் நாசமாக்கி வருகின்றன. இதேவேளை இங்கு கட்டாக்காலி நாய்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

(இ-109-9)

## பேராசிரியருக்கு சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும், உயிரியல் தொழில் நுட்பப் பிரிவின் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெறும் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியத்தின் சேவையை கௌரவித்து ஏற்பாடு செய்துள்ள சேவைநலன் பாராட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மருத்துவபீடத்தில் நடைபெறவிருக்கின்றது.

அன்றுகாலை 11.30 மணிக்கு அவரின் படத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை திறந்து வைப்பார்.

அதன் பின் பாராட்டுரை இடம்பெறும்.

(இ-3)


மாதாந்த ( ஜூலை )
பயிற்சிப் பரீட்சை
வினாத்தாள்
விடைகளுடன்
பெற்றுக்கொள்ளலாம்.
BOND - யாழ். நகர்.
(57044)



இதோ புதிய அம்சங்களுடன்!

**- சுந்தரன் -**

(ஆனி 15 இதழ்) விலை: ரூபா 15

★ உருவகக் கதைகள்
★ சிரிகதை
★ சிறுகதை
★ கவிதை
★ நகைச் சுவைத் துணுக்குகள்
★ சிரிகதைப் போட்டி
★ பொது அறிவுப் போட்டி

(சி/4086) — இன்னும் பல அம்சங்களுடன்.



## கருத்தரங்கு

எழுது வினைஞர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் தொடர்பான இலவசக்க ருத்தரங்கு

ஆசிரியர்: அ. குமாரவேல்
காலம்: 25-06-98 காலை 8 மணி
இடம்: புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்.

குறிப்பு: முன்னர் இப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றியவர்கள் மட்டுமன்றி இப் பரீட்சை எடுக்கும் அனைவரும் பங்குபற்றலாம்.

( 57055 )


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் நெறியாளர்
திரு. சு. கு. சண்முகலிங்கம்
அவர்களின் தந்தையார்

**சுப்பிரமணியம் குமாரசாமி**

அவர்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.


பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

புங்குடுதீவு - நயினாதீவு,
ப. நோ. கூ. சங்கம்.

(சி-4089)

## முதலாண்டு நினைவு நாள் அஞ்சலி

தோற்றம் 17 — 09 — 1945



மறைவு 23 — 06 — 1997

அமரர்

**சின்னத்துரை நாகராசா**

( நயினாதீவு - அளவெட்டி - வலலாய் )

திதி: 12 - 07 - 1998

நேற்றும் எம்மோடு இருந்தது போல் உணர்வு
காற்றோடு வந்த உங்கள் கனிவான வார்த்தைகள்
இப்போதும் காதிலே ஒலிக்கின்றனவே - ஐயகோ
ஓராண்டு முடிந்ததுவோ உணர முடியவில்லை.
நீத்தாருள் ஒருவரென நினைக்க முடியவில்லை
யாருக்கும் எவருக்கும் கெட்ட (து) நினையாமல்
வாழ்ந்த வகை நினைக்க நெஞ்சம் விம்முகின்றது
இடிமேல் இடிவிழ இடம் பெயர்ந்த போதும்
அடிமேல் அடிவிழ ஊர் கடந்த போதும்
நாம் பட்ட துயரம் தான்பட்டதாகி
எம்மோடு இருந்து எல்லாம் உதவியதை
நினைக்க நினைக்க நெஞ்சம் அழுகின்றது
பாசங்களும், நேசங்களும் பத்திரமாய் இருக்க
தேசங்கள் ஒவ்வொன்றுக்கும் அனுப்பி வைத்து
நீர் மட்டும் நும் துணையோடு பட்ட துயரங்கள் ...
தொட்டுச் சுவைத்த சொந்த மண்ணைவிட்டு
எட்டு ஆண்டுகள் பறந்தனவே
ஊரோடும் உறவோடும் ஊர் சென்று மீண்டும்
சீரோடும் சிறப்போடும் வாழ்வோம் எனச் சொன்னீரே
எமக்கெல்லாம் வழிவிட்டு நீர் மட்டும் பிரிந்ததுமேன்?
உங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதியடைவதாக
ஓம் சாந்தி! ஓம் சாந்தி ஓம் சாந்தி!

என்றென்றும் உங்கள் நினைவில்
மனைவி, உற்றார், உறவினர்.

254, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(57052)

## தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை குறித்துப்பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக கல்வி, உயர்கல்வி அமைச்சருடன் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் பேச்சு நடத்தவிருக்கிறது.

போர்க்காலச்சூழ்நிலையில் கல்வியை அழிந்து போகாமல் பாதுகாத்து சேவைக்காலப் பயிற்சி பெற்ற தொண்டர் ஆசிரியர்களில் ஜி.சீ.ஈ(உயர்தர) பரீட்சையில் 3பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் திருமலையில் நடந்த கூட்டத்தில் எடுத்த தீர்மானம் குறித்து கல்வி அமைச்சருக்கு எடுத்துக்கூறவிருப்பதாக சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

(இ-3)

## வடக்கு-கிழக்கு தேர்தல் எதற்காக அவசியம்?

### டக்ளஸ் விளக்கம்

கொழும்பு, ஜூன் 23
வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் ஏன் என்பது குறித்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கை வானொலியில் ''வாரம் ஒரு வலம்'' என்னும் நிகழ்ச்சியில் பங்குபற்றி பேசுகையிலேயே அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:-

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்த மூன்று காரணங்கள் உண்டு.

ஒன்று:- மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளை கணிசமான அளவு மாகாண சபை மூலம் தீர்க்கலாம். பயணிகள் கப்பல் சேவை ஒன்றை மாகாணசபை நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்படும். நீண்ட காலமாக மக்கள் அநுபவிக்கும் பிரச்சினைகளை இலகுவாக்க முடியும்.

இரண்டு:- அரசின் அரசியல் தீர்வு யோசனைகள் நகர முடியாது தேங்கிக்கிடக்கின்றன. இந்த நிலையை இலகுவாக்கி, தேக்க நிலையை நீக்கி அதை நகர்த்த மாகாணசபை நிர்வாகம் தனது பங்களிப்பைச் செய்யலாம்.

மூன்று:- கொடூர யுத்தத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வரமுடியும்.

இந்தக் காரணங்களால் மாகாணசபை நிர்வாகம் செயற்பட வேண்டும்.

சாதக, பாதக நிலைகளை வைத்துக் கொண்டு கட்சிகள் தெற்கில் மாகாணசபைத் தேர்தல் பற்றிக் கதைக்கின்றன. ஐ.தே.க. தனக்கு சாதகமாக இருப்பதால் தேர்தலை நடத்தும்படி கேட்கிறது. அரசு சாதகமில்லாததால் தேர்தலை பின்போட முயற்சிக்கிறது.

அது அவர்கள் பிரச்சினை. அதற்கும் எமக்கும் சம்பந்தமில்லை. ஆனால் வடக்கு—கிழக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் — என்றார்.

(இ-3)

## முட்டை விலை உயர்வு

வடமராட்சிப் பகுதியில் முட்டைக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. கோழிகளுக்கான மாஸ், விலை அதிகரித்தமையால், தற்பொழுது ஒரு முட்டை ஆறு ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 26 — 10 — 1942



விண்ணில் 24 — 05 — 1998

**திருமதி நாகராசா தவமணி**

(அரியாலை)

மாமி மாமி என்று மருமக்கள் நாம் அழைக்க
பாசம் எனும் இழைக்கயிற்றால் எமை நீங்கள் அணைத்தீர்கள்
எம் குடும்ப ஐவருடன் ஓர் உயிராய் இருந்தீர்கள்
வாழ்ந்த காலம் முழுவதும் மனம் மகிழ வைத்தீர்கள்
வாழும் காலம் பல இருந்தும் மாழுங் காலம் வந்ததையோ
இடைக்கொள்ளைப் புற்றுநோயால் நீங்கள் பட்ட துன்பமது
கண்டு கண்டு எம் கண்கள் இமை திறக்க மறுத்தனவே
மாமி என்று நாம் அழைக்க யார் உள்ளார் இனி எமக்கு
தனிமையில் நீங்கள் சென்றாலும் தனித்துவமாய் எம்முடனே
பலகாலம் வாழ்ந்திடவும் உங்கள் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கிறோம் இறைவன்தனை நம் வாழ்நாள் முழுவதுமே.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், சகோதரர்கள்,
மைத்துனிமார், மருமக்கள்,
(கனகரத்தினம் நாகம்மா குடும்பம்)

க. ஏகாம்பரம்
இல. 2. புறாடி ஒழுங்கை,
அரியாலை.

(59995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரி 5 மாடிக் கட்டடம்:
# மீண்டும் வேலை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள யாழ். ஆஸ்பத்திரி ஐந்து மாடிக் கட்டட வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் டாக்டர் எஸ், ஜெகநாதன் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலையில் பாரிய கட்டட வேலைகளை மேற்கொள்வதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துள்ள போதிலும், யாழ். ஆஸ்பத்திரி கட்டடத்துக்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அக்கட்டட வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

யாழ்ப்பாணத்தில் மற்றொரு வைத்திய சாலையை அமைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருந்த போதும், தற்போதுள்ள நிதி நிலைமை காரணமாக புதிய ஆஸ்பத்திரி கட்டும் பணி ஆரம்பிக்கப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3-164)

## ஆலயங்களில் வேள்வி

வலி. வடக்கு, ஜூன் 23

குடாநாட்டில் மேலும் சில ஆலயங்களில் பலியிடல் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

கடந்த சனியன்று தெல்லிப்பழை பேரம்பல வைரவர் ஆலயத்தில் நடந்த வேள்வியில் 50 இற்கும் மேற்பட்ட கடாக்களும், சேவல்களும் பலியிடப்பட்டன.

இந்த வேள்வியில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். சிறிய உழவு இயந்திரங்களிலும், வண்டில்களிலும் கடாக்கள் ஏற்றி வரப்பட்டன.

நவாலி தம்பனை மாரியம்மன் ஆலயத்திலும் 50இற்கும் மேற்பட்ட கடாக்களும், சேவல்களும் பலியிடப்பட்டன.

(ஐ-86)

## தீ விபத்து

யாழ்ப்பாணம் ஜூன் 23

குப்பி விளக்கு தட்டுண்டு தீப்பற்றியதில் எரிகாயத்திற்குள்ளானதாக கடந்த சனிக்கிழமை இளைஞர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சுதுமலை சாவற்காட்டைச் சேர்ந்த செல்வராசா ஜெகன் (வயது 27) என்பவரே எரிகாயத்திற்குள்ளானார்.

(இ-15-139-9)

# புத்தூர் கிழக்கில் 80 சதவீதமான குழந்தைகளிடம் போசாக்கின்மை!

யாழ்ப்பாணம், ஜூன் 23

புத்தூர் கிழக்குப் பகுதியில் பெரும்பாலான குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு போஷாக்கின்மை ஒரு நோய் போன்ற நிலையை அடைந்திருக்கிறது.

அண்மையில் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் இப்பகுதிக் குழந்தைகளில் மேற்கொண்ட ஆய்வில் இருந்து இத்தகவல்கள் தெரிய வந்துள்ளன.

இப்பகுதியிலுள்ள 5 வயதுக்குட்பட்ட 173 குழந்தைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவர்களில் 125 (72 வீதம்) குழந்தைகள். அவர்கள் இருக்க வேண்டிய நிறையிலும் பார்க்கக் குறைந்த நிலையில் காணப்பட்டனர்.

இவர்களில் 8 வீதமான குழந்தைகளுக்கு போஷாக்கின்மை ஒரு நோயின் நிலையில் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இது தவிர ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 40 பாலூட்டும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களில் 75 வீதமானவர்கள் இரத்தச் சோகை மற்றும் உயிர்ச்சத்துக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரிய வந்துள்ளது,

மீளக் குடியமர்ந்த பகுதிகளில் உள்ள வசதி குறைந்த மக்களே இவ்வாறான போஷாக்குத் தொடர்பான குறைபாடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். போரினால் மக்களுக்கு ஏற்படும் உடல்உள ரீதியான பாதிப்புக்கள் இவ்வாறான குறைபாடுகளுக்கு முக்கிய காரணம் என இவ்வாய்வு தொடர்பான இறுதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது,

இந்த ஆய்வு தொடர்பான அறிக்கையை யுனிசெவ் நிறுவனத்திற்கு வழங்கியுள்ள யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் இப்பகுதியிலும் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் உள்ள இது போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அந்தப் பகுதி சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து யுனிசெவ் நிறுவனம் உதவ வேண்டும் எனக்கோரியுள்ளனர்.

(ஐ-5-6)

## கொழும்பில் நடக்கவிருந்த நூலகர்களுக்கான பயிற்சி ஒத்திவைப்பு

வடமராட்சி, ஜூன் 23

கொழும்பில் நடைபெறவிருந்த வடக்கு- கிழக்கு மாகாண நூலகர்களுக்கான பயிற்சிநெறி மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு— கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இலங்கை தேசிய நூலக சபையினால் இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை தேசிய நூலகசபையில் இப்பயிற்சி நெறியை நடத்தப்பட இருந்தது.

இறுதி நேரத்தில் இப் பயிற்சிநெறி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை வடகிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் நூலகர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ஐ-173)

## பாடல் பத்து நூல் வடிவில்

சுழிபுரம், ஜூன் 23

வீரமணிஐயரால் இயற்றப்பட்ட வழக்கம்பரை அம்பாள் பாடல் பத்தை சிவத்திரு. சு. சுந்தரராசக் குருக்கள் நூல் வடிவில் வெளியிடவுள்ளார். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூசணம் எம். கணபதிப்பிள்ளை மூலமாக முதலில் அரங்கேற்றம் செய்யப்பட்டு சங்கீதக் கலைஞர்கள் பக்கவாத்தியங்கள் சகிதம் இப் பாடல் ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளது. பாடல் அரங்கேற்றத்தன்று வீரமணிஐயரை கௌரவித்து பாராட்டும் வழங்கப்படவுள்ளது.

(ஐ-28-9)

# அறிவியல் மாற்றங்களை உள்வாங்கி கலைப்பாடங்களும் நவீனமாகின்றன

## பாடங்களில் உயர்வு தாழ்வு இல்லை

அச்சுவேலி, ஜூன் 23

பாடரீதியில் உயர்வு தாழ்வு பாராட்டிய காலம் மாறிவிட்டது. எல்லாப் பாடத்துறைகளும் ஏற்புடையன என்ற நம்பிக்கையுடன் மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும். 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்புடைய முறையில் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ். பல்கலைக்கழககலைப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்.

அச்சுவேலி மகாவித்தியாலய உயர்தரவகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வ. செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

பாடரீதியில் விஞ்ஞானம், கலை என உயர்வு தாழ்வு பாராட்டிய நிலை இன்று மாறிவிட்டது. மாணவர் கல்வியால் முன்னேற வேண்டும். எம்மை எதிர்கொள்ளவுள்ள 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்புடைய முறையில் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

கலைப் பாடத்துறைகள் நவீன விஞ்ஞான சாதனங்களையும் அறிவியல் மாற்றங்களையும் உள்வாங்கி மாற்றமடைந்துவருகின்றன. யாழ். பல்கலைக்கழககலைப் பீடமும் சம காலத்திற்குஏற்புடைய முறையில் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றது— என்றார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றும் போது—

நாம்முன்னேறி விட்டோம் என நினைத்துக் கொண்டு எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் மறந்து விடக்கூடாது. தமிழர் தம் பண்பாடும் கலாசாரமும் பாதுகாக்கப்பட வேண்டும்— எனக் கூறினார். (அ-11)

# செய்திக் கொத்து

## 70 வீதமானோர் சித்தி பெற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஊரெழு ஸ்ரீ கணேசவித்தியாசாலையில கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிய 70 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

ஏனைய வருடங்களை விட இவ்வருடம் சித்தியடைந்த மாணவர்களின் வீதம் அதிகம்எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## படிப்பகம் இயங்கும்

அரியாலை, ஜூன் 23

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஈச்சமோட்டைக் கிளையின் கட்டடத்தில் இயங்கி வரும் ஈச்சமோட்டை சனசமூக நிலைய வாசகர் படிப்பகம், தொடர்ந்தும் அக் கட்டடத்திலேயே செயற்படும்.

இவ்வூர் மக்களின் வசதி கருதி வாசகர் படிப்பகமும் பாலர் பாடசாலையும் இந்தக் கட்டடத்தின் ஒரு பகுதியில் தொடர்ந்தும் இயங்கும் என்று சனசமூக நிலையத் தலைவர் டி. ஏ. எம். குணசிங்கம் தெரிவித்தார்.

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் இந்தக் கட்டடத்திலேயே தற்காலிகமாக இயங்கி வந்தது. தற்போது சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு முன்னைய இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## ஆலயம் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

காரைநகர், மணற்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தைப் புனரமைத்து, பாலஸ்தாபன மகா கும்பாபிஷேகத்தை சிறப்புடன் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பல பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் வாழும் காரைநகர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்கமேற்படி மகா கும்பாபிஷேக பிரதம குருவாக நவாலி பிரம்ம ஸ்ரீ பிரதிஷ்டா சிரோன்மணி சுவாமி விசுவநாதக் குருக்களையே நியமிக்க வேண்டும் எனவும், ஆலய திருப்பணிச் சபையே மகா கும்பாபிஷேக வேலைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இம் மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற மேற்படி ஆலய திருப்பணி சபையினரின் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

## பனடோல் வந்தது

நெல்லியடி, ஜூன் 23

மந்திகை மருத்துவமனைக்கு சுமார் 25 ஆயிரம் பனடோல் வில்லைகள் யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இங்கு மேலும் சுமார் பன்னிரண்டு வகையான முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. (ஐ-109)

## தமிழ்த்தின விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தமிழ் மன்றத்தின் ஆதரவில் தமிழ்த்தின விழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ் மன்றத் தலைவி செல்வி வித்தியா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசா கலந்துகொண்டார். திருமதி குணராசா பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ஐ)

## இயக்குநர்சபைத் தெரிவு

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு திரு.வே. சிவசுப்பிரமணியதேவா தலைமையில் புதிய இயக்குநர் சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய இயக்குநர் சபைக்கான தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

(ஐ-173)

## மண்டபம் புனரமைப்பு

திருநெல்வேலி, ஜூன் 23

சேதமடைந்த நிலையிலுள்ள யாழ். மத்திய கல்லூரியின் 150ஆவது வருட நிறைவு ஞாபகார்த்த மண்டபம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

தேசிய பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் இத்திருத்த வேலைகளுக்காக 11இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-15)

## சுலோகம் திரை நீக்கம்

திருநெல்வேலி, ஜூன் 22

யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் 'தர்மம் மறுபடியும் வெல்லும்' என்ற பகவத் கீதையின் கிருஷ்ண உபதேசம் சுவர் புடைப்பு சிலையாக கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிற்ப கலாநிதி கா. சிவப்பிரகாசத்தினால் உருவாக்கப்பட்ட இந்த சிலையை வடக்கு- கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் ஆலோசகர் நா. எதிர்வீரசிங்கம் திரைநீக்கஞ் செய்து வைத்தார். கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. (ஐ-135)

## சந்தையில் உ. கிழங்கு

அரியாலை, ஜூன் 23

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கின் விலை அதிகரித்துள்ளது.

தனியார் வர்த்தகர்கள் கப்பலில் கொழும்பில் இருந்து உருளைக்கிழங்கைத் தருவித்ததை அடுத்து இதன் விலை குறைந்துள்ளது.

தற்போது ஒரு கிலோ உருளைக்கிழங்கு நூறு ரூபாவாக விற்கப்படுகின்றது.

(ஐ-17)

## நல்லினத் தென்னை நாற்று மேடை

வடமராட்சி, ஜூன் 23

மூவாயிரம் நல்லினத் தென்னை விதையுள்ள நாற்றுமேடை புலோலி கமநல சேவை நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாரி காலத்தில் இந் நாற்று மேடையிலிருந்து பெறப்படும் நல்லினத் தென்னம் நாற்றுக்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும். இந் நாற்று மேடைக்குரிய நல்லினத் தேங்காய்களை யாழ். பிராந்திய கமநல சேவைத் திணைக்களம் வழங்கியது.

(ஐ-173)

## குளங்கள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 23

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் வட்டக்குளம், ஆலங்குளம், மானிப்பாய் மேற்கு கிராய்க்குளம், நவாலி வடக்கு வேடுவன் கண்டிக்குளம், குண்டுக்குளம் ஆகியன புனரமைப்பு செய்யப்பட உள்ளன.

உலக உணவுத்திட்டஸ்தாபனத்தின் உதவியுடனும் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் மேற்படி குளங்கள் திருத்தி அமைக்கப்பட உள்ளன. (ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13 — 02 — 1917

மறைவு 24 — 05 — 1998

### திருமதி கந்தையா நாகம்மா

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மை அன்போடு அரவணைத்த எங்கள்
அன்புத் தெய்வமே அம்மா!
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
ஆயாக்கடவை ஐங்கரனடி நாடிச் சென்றாயோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஐங்கரனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவால் வாடும்:

சகோதரன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

க. சிறிஸ்கந்தராஜா,
புன்னாலைக்கட்டுவன்.

(57011)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 — 04 — 1953

உதிர்வு 15 — 06 — 1996

### இராசதுரை பூபாலராசா

திதி 23 – 06 – 1998

எங்கள் இனிய அப்பாவே!
ஈராண்டு என்ன
ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறந்திடுமோ எம் நெஞ்சம்?
வற்றாத கண்ணீருடன் வணங்குகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

கொட்டிக்குளிப்பான்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(56979)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 21 — 05 — 1963

தருமத்தின் பிடியில் 23 — 06 — 1993

### நாகமுத்து யோகேஸ்வரி

(ராணி)

(குடும்ப நல உத்தியோகத்தர், கைதடி, தென் கிழக்கு)

ஐந்தாண்டுகள் ஓடி மறைந்ததம்மா
உன் கருணை முகம் மறைய வில்லையம்மா
எம் கண்ணில்
ஈன்றவள் இங்கு இரங்கிடவே
சகோதரர் சோகத்தில் தொய்ந்திடவே
பாதியில் சென்ற தேனோ ராணி?

தாய், சகோதரர்கள், சகோதரிகள்,

கைதடி தெற்கு,
கைதடி.

(57012)

## விபத்தில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 23 வீதியைக் கடக்கும் போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் ஊர்காவற்றுறை நாரந்தனையில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த டென்சுலஸ் டிலக்ஸன் (வயது 4) என்ற சிறுவனே காயமடைந்தார்

( இ-15-139-9 )

## விளையாட்டுப் போட்டி

இளவாலை, ஜூன் 23 இளவாலை றோமன் கத்தோலிக்கத் தமிழ் ஆண்கள் பாடசாலையும், மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் இணைந்து நடத்திய இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை புனிதஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அதிகாரி கே. நாகமணியும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. செல்லையா, இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமரக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(இ-9-ரி)

## பட்டதாரிகள் சங்கத்துக்கு வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 23 யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் வடக்கு — கிழக்கு மாகாண சபையின் ஆலோசகர் கலாநிதி எஸ். எதிர் வீரசிங்கத்தைச் சந்தித்து தமது வேலை வாய்ப்புக்கள் பற்றியும் அது தொடர்பாக தமது நிலைப்பாடுகளையும் விளக்கிக் கூறினார்.

இதனையடுத்து அவர் வடக்கு — கிழக்கு மாகாண சபை ஆளுநர் கலாநிதி காமினி பொன்சேகாவுடன் பேச்சு நடத்தி ஒரு முடிவு சொல்வதாக உறுதியளித்துள்ளார் என வேலையற்ற பட்டதாரிகள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-9)


## தேவை

சமையல் காஸ் வெற்று சிலிண்டர்கள் நல்ல நிலையில் இருந்தால் 1500 ரூபாவுக்கு மேல் வாங்கப்படும்.

விலாசம்:-
No. 377,
மணிக்கூட்டு வீதி,
(பெருமாள்கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.

(57027)



## கொள்வனவு

நியாயமான விலைக்கு
குரக்கன்
கொள்வனவு
செய்யப்படும்.

தொடர்பு:
[illegible]
இணுவில்.

(சி/4088)



## வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. தனது சேவைகள் அனைத்தையும் மீண்டும் ஆரம்பித்துள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். உணவு வசதிகளுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.

மேலதிக விவரங்களுக்கு:
செயலாளர்,
வை. எம். சி. ஏ., யாழ்ப்பாணம்.

(சி/4090)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

### கமலராணி சபாரத்தினம்

மலர்வு 22–02–1972

உதிர்வு 04–07–1997

சிரார்த்த திதி: 23-06-1998 (ஆனி அமாவாசை)

ஆண்டொன்று ஆகுதம்மா
அகத்திரையில் உன்னழகைக்
காண்தொறும் கலங்குகின்றேன்
கனவினிலும் காண்பதுவோ?

உமது பிரிவால் துயரில் மூழ்கும்:
ச. நாகம்மா (தாயார்)

கரணவாய் தெற்கு
கரவெட்டி.

(56939)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 — 01 — 1971

உதிர்வு 09 — 06 — 1994

செல்வன்

### திருநாவுக்கரசு ரஞ்சன்

(ஜேர்மனி)

திதி: 23 - 06 - 98

எங்கள் மூத்த மகனாய்ப் பிறந்தாய் அன்புடன் ரஞ்சன் என்று பெயர் வைத்தோம். யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வியைத் தொடங்கி, உயர் வகுப்பு A/L படித்துக் கொண்டு இருக்கும்போது மகனே! 25-12-88இல் வெளிநாடு (ஜேர்மனி) சென்றாய். திடீர் என்று நோய்வாய்ப்பட்டு 09 – 06 – 1994 இல் எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்து விட்டாய். நான்கு வருடங்கள் சென்றாலும் உன்னுடைய நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரிகள்,
சகோதரர்கள், மாமன்மார், மாமிமார்,
சித்தப்பாமார், சித்திமார், மைத்துனர்கள்,
மைத்துனிகள், மருமக்கள், நண்பர்கள்.

125, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(57018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வாபஸ் பெறுக

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் 84,000 குடும்பங்களில் 34,000 குடும்பங்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதியுடன் நிவாரணம் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி வடமாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் நிவாரண நிறுத்தம் அமுலுக்கு வரவுள்ளது.

ஐந்து மாவட்டங்களிலும் இப்போது நிவாரணம் பெறும் குடும்பங்களில் சராசரியாக 22 சத வீதமான குடும்பங்களுக்கு நிவாரணம் நிறுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் — 40 சத வீதம்; கிளிநொச்சியில் — 20 சத வீதம்; முல்லைத்தீவில் — 20 சத வீதம்; மன்னாரில் — 15 சத வீதம்; வவுனியாவில் — 15 சத வீதம் என்ற வகையில் நிவாரணம் நிறுத்தப்படுகிறது.

வடமாகாண மக்களின் நிவாரணம் நிறுத்தப்படுவதற்குக் காரணம் அரசாங்கத்துக்கு உண்டாகியுள்ள நிதி நெருக்கடி என்று கூறப்படுகிறது. பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுக் கூட்டத்தில், நிவாரணம் வழங்குவதை நிறுத்தி, இடம் பெயர்ந்தோரை இயன்றளவு விரைவில் மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட அறிவுரையும் இதற்கு இன்னொரு காரணம் என்று காட்டப்படுகிறது.

இந்த நாட்டில் நிதி நிலைமை மோசமடைவதற்குப் பிரதான காரணம் அரசாங்கம் 'விட்டேனோ பார்' என்று நடத்திவரும் போர். அந்தப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தான் இடம்பெயர்ந்தவர்கள் — அகதிகள் — வடமாகாண மக்கள்.

நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி அவர்கள் வயிற்றில் தானா அடிக்க வேண்டும்? ஏனைய மாவட்டங்களில் உள்ள அகதிகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து வடக்கு மக்களைச் சாகடிக்கும் நோக்கம் ஏன்?

இடம் பெயர்ந்தவர்களை விரைவில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பாரிஸ் மாநாட்டின் அறிவுரையைக் கேட்டு, போரை நிறுத்தினால் நிவாரணத்தை நீண்ட காலத்துக்கு வழங்க வேண்டிய தேவையிருக்காது.

தமிழர்கள் பட்டினியால் இறந்தாலும் பரவாயில்லை போரைத் தொடர வேண்டும் என்ற எண்ணமே அரசிடம் மேலோங்கி நிற்கின்றது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

அரசுக்குள்ள நெருக்கடிகளைக் குறைப்பதற்குத் தமிழர்களைப் பாதிக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவது தான் ஒரே மார்க்கமா? தட்டிக் கேட்டுத் தண்டனை வழங்க எவரும் இல்லை என்பதால் தமிழர்களை எதுவும் செய்யலாம் என்ற நிலை தானே இது?

தமிழர் நலனில் உண்மையாகவே அரசுக்கு அக்கறை இருந்தால் வடமாகாண அகதிகளுக்கு வழங்கும் நிவாரணத்தை நிறுத்தும் முடிவை வாபஸ் பெறவேண்டும், போரை நிறுத்தி தமிழர்கள் அகதிகளாவதைத் தவிர்க்கவேண்டும்.

# மிதிவெடிகள், கண்ணிவெடிகளை முழு அளவில் அகற்றிவிட முடியும்

## யுத்தம் தொடர்வதால் மீண்டும் ஆபத்து வராது என்று கூற முடியாது

## யு. என். டி. பி. அதிகாரி உதயனுக்குப் பேட்டி

யாழ்ப்பாணக்குடா நாட்டில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் மற்றும் வெடிப்பொருள்களின் விவரம், புதைக்கப்பட்டிருக்கும் இடங்களை அடையாளப்படுத்தல் போன்ற வேலைகளை தற்பொழுது ஆரம்பிக்கவுள்ளோம். இரண்டு வருடங்களுக்குள் முழுவதுமாக இடங்களைக் கண்டுபிடித்து விடுவோம். இதற்கென வெடிப் பொருள்களை அகற்றும் எமது முழுக் குழுவினரும் யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளனர்.

இவ்வாறு ஐ. நா. அபிவிருத்தித் திட்ட (யு. என். டி. பி.) வெடிப் பொருள் அகற்றல் தொடர்பாளர் டேவிட் டெய்லர் தெரிவித்தார்.

வெடிப் பொருள்கள் அகற்றுவதில் நிபுணத்துவம் வாய்ந்த இவர் லண்டனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான விவரங்களையும், அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

யாழ்ப்பாணம் கோயில் வீதியிலுள்ள ஐ. நா. அபிவிருத்தித் திட்ட பணிமனையில் வைத்து அவர் எமது செய்தியாளருக்குப் பேட்டி ஒன்றை வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு:

கேள்வி: வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டுள்ள இடங்களின் விவரம் பற்றித் தெரிவிக்க முடியுமா?

பதில்: ஆம். வெடிபொருள்கள் புதைக்கப்பட்டுள்ள இடங்களின் வரைபடம் ஒன்றை இராணுவத்திடம் இருந்து பெற்றுள்ளோம். யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், புத்தூர், கோப்பாய், நீர்வேலி, பண்டத்தரிப்பு, சுழிபுரம், மாதகல், தச்சன்தோப்பு, மாவிட்டபுரம், கீரிமலை, வசாவிளான், தொண்டமானாறு, கரணவாய் போன்ற பல இடங்களில் தம்மால் வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி, புத்தூர்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளினால் ஜொனி மிதி வெடிகள் புதைக்கப்பட்டுள்ள விவரங்களையும் பெற்றுள்ளோம்.

கே: வெடிப் பொருள்களை அகற்றுவது தொடர்பாக தாங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

ப: கடந்த இரண்டு மாத காலமாக இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். மிதிவெடி அகற்றல் திட்டமிடல் நடவடிக்கை அதிகாரி பென்றெவ்றி கோவாட்டும் நானும் இணைந்து முதலில் இங்குள்ள நிலைவரங்கள் பற்றி ஆய்வுகள் நடத்தி வெடிப் பொருள்கள் அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை அறிந்து கொண்டதுடன் இது தொடர்பாக ஐ. நா. அபிவிருத்தித்திட்ட நடவடிக்கைகளுக்கு நன்கொடை வழங்கும் நாடுகளுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தோம்.

அரசுடனும் இராணுவத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி இதற்குத் தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு அனுமதி பெற்றுள்ளோம்.

உள்ளூரில் 50 பயிற்சியாளரைத் தெரிவு செய்து இம்மாத இறுதியிலிருந்து அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வெடிப்பொருள் அகற்றும் பணியில் ஈடுபடுத்தவுள்ளோம்.

### புலிகளுக்கும் அறிக்கை

கே: இத்திட்டம் தொடர்பாக உள்ளூர் விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடினீர்களா?

ப: இல்லை. ஆனால் ஐ. நா. மட்டத்தில் இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கும் இங்கு நாங்கள் மேற்கொள்ளும் வெடிப் பொருள் அகற்றல் நடவடிக்கை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

கே: மிதிவெடிகளை அகற்றுவதற்கு மோப்ப நாய்களும் பயன்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்படுவது பற்றி கூறமுடியுமா?

ப: மண்ணில் புதையுண்ட வெடிப்பொருள்களை கண்டுபிடிப்பதில் மோப்ப நாய்களின் பங்கும் மிகக் கூடுதலாக இருக்கும். இதற்கென எட்டு மோப்ப நாய்கள் லண்டனில் இருந்து வருவிக்கப்படவுள்ளன.

கே: வெடிப் பொருள் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்...?

ப: தொலைத் தொடர்பு சாதனங்கள் பாவிப்பதற்கு இராணுவத்தின் அனுமதி இதுவரையும் கிடைக்கவில்லை. அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம், விரைவில் தொலைத் தொடர்பு சாதனம் எமக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். எமது செயற்பாடுகளுக்கு இங்குள்ள எல்லோரினதும் ஒத்துழைப்பும்தேவை.

வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டுள்ள விவரங்களை படையினர் எமக்கு சமர்ப்பித்திருந்தபோதும்சில இடங்களில் புதைக்கப்பட்டுள்ள வெடிப் பொருள்களை அகற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

### சில இடங்களில் அகற்ற அனுமதி இல்லை

கே: அனுமதி மறுக்கப்பட்டுள்ள இடங்களின் விவரங்களைக் கூறமுடியுமா?

ப: ஆம். கீரிமலை தொடக்கம் மாவிட்டபுரம் தொண்டமானாறு கரையோரம் வரை பலாலி விமான படைத்தளத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால் அப்பகுதிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கு எமக்கு அனுமதியில்லை.

கே: படையினர் அனுமதித்த ஏனைய இடங்களிலுள்ள வெடிப் பொருள்கள் முற்றாக உங்களால் அகற்றப்படுமா?

ப: இந்த வெடிப் பொருள்களை முழு அளவில் எம்மால் அகற்ற முடியும். ஆனால் இந்த இடங்களில் மீண்டும் அரச படையினரும் விடுதலைப் புலிகளும் வெடிப் பொருள்கள் புதைக்க மாட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் எம்மால் வழங்க முடியாது. ஏனெனில் எதிர்காலங்களில் வெடிப்பொருள்கள் புதைக்க கூடாது என்ற ஒப்பந்தத்தில் இருபகுதியும் கையெழுத்து வைக்க மறுத்து விட்டார்கள். யுத்தம் தொடர்ந்து கொண்டிருப்பதால் மிதிவெடிகள், கண்ணிவெடிகளும் இருபகுதியினராலும் புதைக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

கே: வெடிப்பொருள்களை செயலிழக்கச் செய்யும் தொழில் மிகவும் அபாயகரமானதும், உயிராபத்து நிறைந்ததும் என்ற அச்சம் எம்மவர் மத்தியில் நிலவுகின்றது. இவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: மிதி வெடிகள், கண்ணி வெடிகள் ஆபத்தானவை, அபாயகரமானவை தான். அவை வெடிக்கும் போது. ஆனால் அதற்குமுன் திட்டமிட்ட முறையில் அவற்றை செயலிழக்கச் செய்தால் எந்த ஆபத்தும் வராது. இதற்கான பயிற்சிகளைப் பெற்ற பின் இவற்றை எவ்வித பிரச்சினைகளுமின்றி செயலற்றவையாகச் செய்ய முடியும்.

இதனால் இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. இந்தக் கேள்வி எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இத்தொழிலில் பல வருடமாக ஈடுபட்டு வரும் நாம் இதுவரையும் எந்த வித ஆபத்தையும் சந்தித்ததில்லை.

நாம் புதிய புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வெடிப் பொருள்களை அகற்றி வருவதால் எந்த வித அபாயமுமின்றி எம்மால் செயற்பட முடியும் என்று நம்புகின்றேன்.

கே: இத்தொழிலில் தங்களின் அனுபவம் பற்றி தெரிவிக்கமுடியுமா?

ப: கடந்த 15 வருடங்களாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். பொஸ்னியா, குறேஸியா, லிபியா, குவைத், ஈராக், ஆப்கானிஸ்தான், சோமாலியா, கம்போடியா, லாஹோஸ் போன்ற நாடுகளில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டேன்.

### மோப்பத் திறமை

கே: இத்துறையில் தங்களின் மறக்க முடியாத அனுபவம்

ப: பொஸ்னியாவில் றெயில்வே சுரங்கப்பாதையில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். எமக்கு முன்னுக்கு இரு மோப்ப நாய்கள் சென்று கொண்டிருந்தன ஒரு மரத்தடியில் சென்றதும் நாய்கள் நின்று அங்கு மிங்கும் பார்த்தன. அவை மோப்பமிட்டுக் கொண்டிருந்த அப்பகுதியில் வெடிப் பொருள்கள் இருப்பது பற்றி எமக்கு 'சிக்கனல்' கொடுத்தன.

நாம் உடனே குறிப்பிட்ட இடத்திற்கு சென்று மிகவும் அவதானமாக செயற்பட்டோம். அங்கிருந்த மரத்தின் நுனியில் வெடிமருந்து பொருள்கள் மிகச் சிறிய அளவில் இருப்பதைக் கண்டுபிடித்தோம். உடனே செயலில் இறங்கினோம். சிறிய வெடி மருந்துப் பொருள்களைக் கூட மோப்பம் பிடிக்கும் திறமை அந்த நாய்களிடமிருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டேன். இது எனது மறக்க முடியாத அனுபவங்களில் ஒன்று.

கே: யாழ். குடாவிலும் மோப்ப நாய்களின் பணி முக்கியமாக இருக்கப் போகிறதா?

ப: எமக்கு வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டுள்ள வரைபடம் ஒன்று கையளிக்கப்பட்டிருந்தாலும் வரைபடத்திலுள்ள இடங்களை விட ஏனைய பகுதிகளிலும் வெடிப் பொருள்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் இரு பகுதியினரும் இங்கு பல இடங்களில் யுத்தம் புரிந்துள்ளனர். அவ்விடங்களில் நிச்சயமாக வெடிப் பொருள்கள் இருக்கும் என்று நம்புகிறோம். இத்தகைய இடங்களில் நாய்களை ஈடுபடுத்தி நாம் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்ய முடியும்.

கே: தாங்கள் எமது மக்களுக்கு கூறும் ஆலோசனை என்ன?

ப: மிதிவெடிகள், கண்ணிவெடிகள் மற்றும் ஜொனி வெடிகள் ஆங்காங்கே புதைத்து வைக்கப்பட்டுள்ளதை எல்லோரும் அறிவீர்கள். அந்த இடங்களிற்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் காணிகளில் மற்றும் பொது இடங்களில் வெடிப்பொருள்கள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதைக்கண்டால் உடனே எமது யு. என். டி. பி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டால் நாம் நேரில் வந்து அவற்றைச் செயலிழக்கச் செய்வோம். இந்த விடயத்தில் நீங்கள் மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். வெடிப் பொருள்களை நீங்கள் எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சித்து பார்க்காதீர்கள். தொட்டு-

( 8 ஆம் பக்கம் பார்க்க)

**பேட்டி கண்டவர்: கேசரி**

**நாளை**

**ஆனி - 10**

புதன்கிழமை

திதி: அமாவாசை முற்பகல் 10.21 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம் காலை 7.05 வரை.

சுபநேரம் 04.25 - 05.55

ராகுகாலம்: 11.55 - 01.25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான். கோபக்காரனோ தன்னையே இழக்கிறான்.

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவும் நாடுகளின் அழுத்தமே நிவாரண நிறுத்தத்துக்குக் காரணம்

கொழும்பு, ஜூன் 23
இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அழுத்தத்தைத் தொடர்ந்தே அகதிகளுக்கான உணவு நிவாரணத்தைக் நிறுத்துவதற்கான முடிவை அரசு எடுத்ததாகத் தெரியவருகின்றது. என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் பாரிஸ் நகரில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது அகதிகளுக்கான நிவாரணம் நிறுத்கப்பட்டு அகதிகள் கூடிய விரைவில் மீள் குடியமர்தத் திட்டத்தின் கீழ் குடியமர்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ். மாவட்டத்தில் புலிகள் இயக்கம் ஆங்காங்கே சில தாக்குதல்களை நடக்தி வருவதனால் யாழ். அபிவிருக்தித் திட்டங்களில் அவநம்பிக்கை கொண்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் பாரிய அபிவிருக்கித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கத் தயக்கம் காட்டி வருகின்றன.

ஜனாதிபதி யாழ். அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்களை அழைத்து பேச்சுவார்க்தை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

யுத்தம் நடைபெறும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அகதிகள் தொடர்பான கணக்கீட்டில் அரசுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு அகதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணம் புலிகள் இயக்கத்தைச் சென்றடைவதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு இதே போன்று பிரச்சினை காரணமாக யாழ், மாவட்ட அகதிகள் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க மூவர் கொண்ட குழுவொன்றை அரசு நியமித்தது குறிப்பிடத்தக்கது. இந்த விடயம் தொடர்பாக முன்னாள் யாழ். அரசாங்க அதிபருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டதும் தெரிந்ததே.

இதேவேளை —

தற்போது வழங்கப்பட்டு வரும்நிவாரணம் போதுமானதாக இல்லாமையினால் அவற்றை வழங்குவது பெரும் பிரச்சினையாகவுள்ளது. ஆகவே குறைக்கப்பட்ட தொகையில் யார் யார் உணவு நிவாரணம் பெறத் தகுதியுடையோர் என்பதை கண்டறிவதே பெரும் சிரமமான காரியமாகும். இதனால் எமக்கு மீண்டும் வேலைப்பளு அதிகரித்துள்ளது என அரச அதிபர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

வடபகுதியில் உள்ள அகதிகளுக்கான உணவு நிவாரணம் குறைக்கப்பட்ட போதிலும் ஏனைய மாவட்டங்களில் உள்ள அகதிகளுக்கு உணவு நிவாரணத்தைக் குறைப்பது தொடர்பாக எந்த விதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை— அகதிகளுக்கான உணவு நிவாரணம் வழங்குவதற்கென அரசு மாதம் ஒன்றுக்கு 24 கோடி ரூபாவைச் செலவிட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. — இப்படி அந்த செய்தி வட்டாரங்கள மேலும் தெரிவித்தன.

(ஐ-6)

## வலி. மேற்குப் பகுதியில் சிமெந்து விநியோகம்

வட்டுக்கோட்டை, ஜூன் 23
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் போரினால் பாதிக்கப்பட்ட வீடுகள், மலசலகூடங்கள் போன்றவற்றை புனரமைப்பு செய்வதற்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சிமெந்துப் பைக்கெட்டுக்களில் மேலும் ஆயிரம் பைக்கெட்டுகள் கிடைத்துள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளபடி இன்று செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக களஞ்சியத்தில் இருந்து சிமெந்துப் பைக்கெட்டுக்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே 9 ஆயிரம் சிமெந்து பைக்கெட்டுக்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

(இ-12)

## மீனவர் பிரச்சினை குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 23
கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கும் இன்லறய பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 பணிககு பேராசிரியர் கா. சித்திரவடிவேலு தலைமையில் யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறும்.

இந்தக்கலந்துரையாடலில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் எஸ். ஏ. ஜோசப் ஆகியோரின் சிறப்புரையும் —

விஞ்ஞானத்துறை பீடாதிபதி போாசிரியர் வி. கே. கணேசலிங்கம் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க, தலைவர் எஸ். தவரட்ணம் ஆகியோரின் கருத்துரையும் —

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் ஏ. எஸ்- சூசையின் முடிவுரையும் இடம்பெறவுள்ளன.

(இ-8)

## போக்குவரத்துச் சபை ஊழியருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதிகள், காப்பாளர்கள், வீதிப் பரிசோதகர்கள், பஸ்நிலைய ஊழியர்கள் ஆகியோருக்கு விசேட பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

போக்குவரத்துச் சபையின் பயிற்சி மண்டபத்தில் இடம்பெற்ற இந்தப் பயிற்சியில் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்சலிங்கம் கலந்து கருத்துரை வழங்கினார்.

கடந்த ஆறு வருட காலமாக போர்ச் சூழ்நிலை, இடம்பெயர்வு ஆகியன காரணமாக வ. போ. சபை இயங்க முடியவில்லை. தற்போது இயங்கத் தொடங்கி இரு வருடங்கள் ஆகின்றன.

சபையின் கட்டடங்கள், இயந்திரங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று சபையின் முக்கிய சொத்தான மனித வளமும் புனரமைக்கப்பட வேண்டும். அதற்கான பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம்.

இத்தகைய பயிற்சிகள் மூலம் அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும். முக்கியமாக மக்களுக்கு நேரந்தவறாத சேவை, பஸ்களின் துப்புரவு என்பன பேணப்பட வேண்டும் — இப்படி வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

ஆளணி முகாமையாளர், யாழ். சாலை முகாமையாளர், கணக்காளர் பகுதி சிரேஷ்ட உத்தியோகத்தர், செயலாற்றுப்பகுதி சிரேஷ்ட உத்தியோகத்தர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

(இ-3)

## போதைவஸ்து குற்றம்

## சொத்து பறிமுதலுக்கும் சட்டத்தில் திருத்தம் வரும்!

கொழும்பு, ஜூன் 23
போதைவஸ்து குற்றச்சாட்டுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கும் சட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்யும் வகையில் திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது.

போதைவஸ்து வைத்திருப்பவர்களுக்கு தற்சமயம் வழங்கும் தண்டனைகள் போதாது இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து அது தொடர்பான சட்டவிதிகள் திருத்தப்படும்.

போதைவஸ்து பாவனை 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடையே அதிகமாக இருப்பதாகவும் —

பாடசாலை மாணவர்களும் இதில் நாட்டம் கொள்வதாகவும் — போதைவஸ்து தடுப்புப் பொலீஸார் தெரிவித்தனர்.

வருடாந்தம் 12 ஆயிரம் பேர் போதைவஸ்து பாவனைக் குற்றத்துக்காக கைது செய்யப்படுவதாகவும் —

சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருபவர்களில் 60 சதவீதமானவர்கள் போதைவஸ்துபாவனைக்கு தண்டனை பெற்றவர்கள் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-10-3)

## தலபுராணம் நூல் வடிவில்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வல்வெட்டி அருள்மிகு வேவில்வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தலபுராணம் நூல் வடிவில் வெளியாகியுள்ளது.

பண்டிதர் ஆ. கதிர்காமத்தம்பி ஆசிரியரால் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலில் ஆலயத்தின் சிறப்புக்கள், பழமைநிலை பல்வேறுதலைப்புக்களில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## அங்கிலிக்கன் திருச்சபையின் சமாதான, நீதிக்கான குழுவினர் யாழ். வந்தனர்

நெல்லியடி, ஜூன் 23
அங்கிலிக்கன் திருச்சபையின் சர்வதேச சமாதானத்திற்கும், நீதிக்குமான அமைப்பைச்சேர்ந்த ஏழு பேர் கொண்ட குழுவினர் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படக்கூடிய புனர்வாழ்வுப் பணிகளை இனங்காண்பதே இக்குழுவின் பிரதான நோக்கமாகுமென அறியப்படுகின்றது.

பனமாவைச் சேர்ந்த பேராயர் ஜேம்ஸ் ஹொட்லி. நஷரத்தைச் சேர்ந்த அதிவண. கனல் நைம் ஸ்ரிபன் அற்றிக், அமெரிக்காவைச் சேர்ந்த அதிவண. பிறைன் ஜீவிஸ் கிறைவர்ஸ், நியூசிலாந்தைச் சேர்ந்த அதிவண ரிபா, இலங்கையைச் சேர்ந்தஅருட்திரு. யோசெவ் சர்வானந்தன், அருட்திரு. பிறின்ஸ் தேவானந்தமற்றும் சி. பெர்னாண்டோ ஆகிய ஏழு பேருமே இரு நாள் பயணம் மேற்கொண்டு யாழ். நகர் வந்துள்ளனர்.

இவர்கள் தங்கி நிற்கும் நாள்களில் யாழ். நகர படையணியின் தளபதி, அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச திணைக்கள உயரதிகாரிகள், மதத்தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து புனர்வாழ்வு அபிவிருத்தி சம்பந்தமாக ஆராயவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-109)

## யுனிசெவ் அம்புலன்ஸ் வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு இரு அம்புலன்ஸ் வாகனங்களை யுனிசெவ் அமைப்பு வழங்கவிருக்கிறது.

யாழ். ஆஸ்பத்திரிகளில் நிலவும் அம்புலன்ஸ் தட்டுப்பாட்டை அடுத்து அந்த அமைப்பு வழங்கவுள்ள அம்புலன்ஸ் வாகனங்களில்ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்கும், மற்றையது பளை ஆஸ்பத்திரிக்கும் வழங்கப்படவுள்ளன.

(இ-3)

## இலங்கையைச் சேர்ந்த 53 பணிப்பெண்கள் திருப்பி அனுப்பப்படுவர்

சவுதிஅரேபியாவில் கடமையாற்றிய இலங்கையைச் சேர்ந்த வீட்டுப்பணிப்பெண்களில் 53பேர் வேலை இழந்து றியாத் நகரில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்கி உள்ளனர்.

இப்பணிப்பெண்கள் இங்கிருந்து சவுதி அரேபியா செல்ல முன்னர் தாங்கள் பணிபுரியவுள்ள வீட்டு எஜமான்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை அந்த எஜமான்கள் மீறி நடக்க முற்படுவதாகவும்—

எனவே தொடர்ந்தும் அங்கு பணியாற்ற முடியாது எனவும் —

இப்பெண்கள் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் இதற்காக 10லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தொழில் அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-10)

## மிதிவெடிகள்..

(ஏழாம் பக்கத் தொடர்)

பார்ப்பதை தவிர்ப்பதுடன் சிறுவர்கள் மற்றும் கால் நடைகளையும் அப்பகுதிக்குச் செல்ல விடாது உடனே எமக்குத் தகவல்கள் தாருங்கள். நாம் அவற்றை அகற்றுவோம்.

வெடிப்பொருள்கள் அகற்றுவதற்காக எமது முழு அணியினரும் இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விடுவார்கள். அதன் பின் நாங்கள் முழுமையாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோம். ★


**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

பழைய மாணவர் சங்கத்தினால்
நடத்தப்படும்

**கண்காட்சி**

இடம்: வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி
காலம்: ஜூன் 28, 29
நேரம்: காலை 9-30 — மாலை 5-00 மணி

28 - 06 - 1998

தலைவர்: திருமதி ஜே. குலசிங்கம்
பிரதம விருந்தினர்: திருமதி லோ. குமாரசாமி
(முன்னாள் அதிபர் வ. இ. ம. கல்லூரி)
சிறப்பு விருந்தினர்: டாக்டர் ஆர். தெய்வேந்திரன்
(சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம்)

29 - 06 - 1998

பிரதம விருந்தினர்: திரு. வே. தி. செல்வரத்தினம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
சிறப்பு விருந்தினர்கள்:
டாக்டர் எஸ். கதிரைவேற்பிள்ளை
(மாவட்ட வைத்திய அதிகாரி, பருத்தித்துறை)
செல்வி அ. கனகரத்தினம்
(அதிபர், வ. இ. ம. கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கத்தினர்
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.
(சி/4091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை நாள் லீவு ஊழியருக்குக் கட்டாயம்

## ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடை காரியாலய சட்டத்தின் கீழ் வர்த்தக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள்கள் ஓய்வு வழங்க வேண்டும்.

உதவித் தொழில் ஆணையாளர் சி. சி. அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அநேகமான வியாபார நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு ஒன்றரை நாள் ஓய்வு வழங்கப்படுவதில்லை. எமது பரிசோதனைகளின்போது இவை கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். வர்த்தகர் சங்கம் இந்த ஓய்வு முறையினை நடைமுறைப் படுத்துமாறு தனது அங்கத்துவ நிறுவனங்களை வலியுறுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய நிறுவனங்களும் இதனைக் கடைப்பிடிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

தொழில் தகராறு தொடர்பான நடவடிக்கைகளை நீதிமன்றங்கள் இயங்காமையினால் தற்பொழுது செயற்படுத்த முடிவதில்லை.

எமது ஊழியர்கள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று தொழிற்சட்டங்கள் அனுசரிக்கப்படுகின்றதா என்பதைப் பரிசோதித்து வருகின்றனர்.

தொழிற்சட்டத்தைக் கடைப்பிடித்து வந்தால் தொழில் நிறுவனங்கள் சிறப்பாக இயங்க முடியும் என்றும் அவர் கூறினார்.

# லியோ எழுத்து மூல போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 23

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம்306 பி பிராந்தியம் 8 இன் லியோ கருத்தரங்கு நிகழ்வை யொட்டி மாவட்டலியோ தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''லியோக்களுக்கான'' எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை இன்று செவ்வாய்க் கிழமைபிற்பகல்4.00மணிக்கு யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியில்நடைபெறும்எனமாவட்ட லியோ தலைவர் பா. தவபாலன் அறிவித்துள்ளார். (இ-3)

# தபாலதிபர் இடமாற்றம்

யாழ். பிரதம தபாலகத்தின் புதிய பிரதம தபாலதிபராக எம். திலகநாதன் கடந்த சனிக்கிழமை முதல் கடமையேற்றுள்ளார்.

இதுவரை பிரதம தபாலதிபராகப் பணியாற்றி வந்த எஸ். கோடீஸ்வரன், அம்பாறை பிரதம தபாலகத்திற்குப் பதவி உயர்வுடன் இடமாற்றப்பட்டுள்ளார்.

## ஆபத்துக்கால கொடுப்பனவு கோரி

# பல்கலை. ஊழியர் போராட்டத்துக்கு நிறைவேற்று அலுவலர்களும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஆபத்துக் காலக் கொடுப்பனவு வழங்கப்படாததை ஆட்சேபித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும், எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியமும் கூட்டாக இன்று நடத்தவுள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்குப் பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியமும் கூட்டாக இணைந்து இன்று மேற்கொள்ளும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் தனது தார்மீக ஆதரவை வழங்க ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

1996 ஜூலை முதல் டிசம்பர் வரைக்கான ஆபத்துக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட போதும் எமது பல்கலைக்கழக ஊழியர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாகியும் இக்கொடுப்பனவு வழங்கப்படாமை கவலைக்குரிய விடயம். யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் இக்கொடுப்பனவைப் பெற சகல விதத்திலும் உரித்துடையவர்கள்.

ஆபத்துக்கால ஊக்குவிப்புத் தொடர்பாக 1995 இல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தபோதும் யாழ். மாவட்டத்தையும் உள்ளடக்கி அச்சுற்றறிக்கைக்கு குறைநிரப்பியாக பின்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறியமையாலேயே இதனை யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் பெற முடியாத நிலையில் உள்ளனர். இதனை பல்கலைக்கழக ஆணைக்குழு அங்கீகரிக்காமை ஆச்சரியத்துக்குரியது. இது தொடர்பாக பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் பொறுப்பான செயற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் சகலவிதத்திலும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக பாதிக்கப்பட்ட நிலையிலும் பல்கலைக்கழகச் செயற்பாட்டுக்கு தமது உழைப்பை நல்கி வரும் ஊழியர்களுக்கு தமது உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

இது விடயத்தில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகமும் பேரவையும் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்துத் தமது ஊழியர்களின் நியாய பூர்வமானதும் நீதியானதுமான குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என எமது ஒன்றியம் எதிர்பார்க்கின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் -- 1998

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 1998 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள், |
|---|---|
| 2. 1. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம் மாவட்டத்திற்குப்பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2. 2. பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் இடுவித்துக் கொள்ளலாம்.

4. 1. இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம், இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4. 2. பதியப்படுவதற்கான தகைமைபற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ்விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல. 10
யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
1998 ஜூன் மாதம் 22 ஆம் திகதி.

### ஒரு தேருநராக பதியப்படுவதற்கான விண்ணப்பப்பத்திரம்-1998

.................................... பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

.................................... ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்து கொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2.1: முழுப் பெயர்:
..............................................

2.2: முகவரி:
..............................................
..............................................

2.3: பிறந்த திகதியும் வயதும்:
..............................................

2.4: 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?
..............................................

2.5: பால்: ..............................

2.6: இனம்; ..............................

2.7: பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக.
..............................................

2.8: தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்;
..............................................

2.9: கிராம உத்தியோகத்தரின் பிரிவு:
..............................................

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ..............................

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகின்றது / செய்யப்படவில்லை.
சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்பு பிரிவு;
..............................................

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்: ..............................
வீட்டு இலக்கம்; ..............................
கிராமம் / வீதி: ..............................

..............................................
கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும்
பிரிவின் இலக்கமும்

திகதி: ..............................

(சி/4095)

## சமய நிகழ்வில்

வட்டுக்கோட்டை ஜூன்23

சங்கானை அரசடி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது உற்சவம் தொடர்ந்து பத்துநாள்கள் நடைபெறும்.

ஆலயத்திற்கு புதிதாக தேர்முட்டி அமைக்கும் வேலை நடைபெற்றுவருகிறது. தேர்த்திருவிழா 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத்திருவிழா முதலாம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். (இ-12)

★ ★ ★

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. நாளை புதன்கிழமையன்று தீர்த்தஉற்சவம் இடம்பெறும். (ஐ-135-139)

# பாண்ட் வாத்திய இசைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன், 23

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306, பி பிராந்தியம் 8 லியோக்களின் கருத்தரங்கை ஒட்டி யாழ். மாவட்ட லியோ தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாண்ட் வாத்திய இசைப் போட்டி நாளை பிறபகல்2.30மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இதுவரை பங்குபற்றாத பாடசாலைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குமுகமாக விண்ணப்பங்கள் இன்று பிற்பகல் 2,30 வரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் கொக்குவில் இந்துக் கல்லூரி லியோ கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட லியோ தலைவர் லயன் பா. தவபாலன் கேட்டுள்ளார். (இ-3-ரீ)

# திருத்தம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை (24 - 06 - 98) புதன்கிழமை நடைபெறவுள்ளன.

உதயன் நேற்றைய இதழின் 8 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் 26-6-98 புதன்கிழமை என்று அச்சுத் தவறாகப் பிரசுரமானதைத் திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கு பிரதேச சபை விவகாரம்:

# விடுதலைப் புலிகளிடமிருந்து மிரட்டல் வரவில்லை என்கிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு, ஜூன் 23
வலி.வடக்கு பிரதேச சபை நிர்வாகத்தை நடத்திவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து மிரட்டல் எதுவும் விடுக்கப் படவில்லை. பிரதேச சபை நிர்வாகம் இயங்குவதைத் தடைசெய்ய எந்த ஓர் இயக்கமும் எச்சரிக்கை விடுத்ததாகவும் தெரியவில்லை. இது யாரோ தனிநபர்களின் செயலாகவே இருக்கவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சகல அமர்வுகளையும், நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவது எனவலி.வடக்கு பிரதேசசபை நிர்வாகத்தை நடத்திவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் எடுத்துள்ள முடிவு தொடர்பாக பி.பி. ஸிக்கு கருத்துவெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல செயற்பாடுகளையும் நிறுத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் வலி. வடக்கு பிரதேச சபை நிர்வாகத்தினருக்கு அதிகாரபூர்வமாக உத்தரவு எதனையும் விடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

## ஆண்டு -1 வகுப்புகளில் இனி 35 மாணவர்களே!

அடுத்த ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கான வகுப்புக்களில் அதிக பட்சமாக 35 மாணவர்களுக்குமேல் அனுமதிக்கக் கூடாது என கல்வி, உயர்கல்வி அமைச்சு சிபார்சு செய்துள்ளது.

கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைய அமைச்சு இந்தச் சிபார்சை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பக்கல்வி தொடர்பான சீர்திருத்தங்களுக்கு அமைய சிறுவர்களின் செயற்பாடுகளுக்கு அதிக நேரம் ஒதுக்கப்படவேண்டும் எனவும் அதைஉரிய முறையில் செயற்படுத்த வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தற்போதுகம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆரம்பக கல்வி தொடர்பான சீர்திருத்தங்கள் அடுத்த ஆண்டு முதல் நாடெங்கும் நடைமுறைப்படுத்கப்படும் எனவும் இதன்பொருட்டு மாவட்ட மட்டங்களில் குழுக்களாக பயிற்சி அளிப்பதற்கு கல்வி, உயர்கல்வி அமைச்சும் தேசியக் கல்வி நிறுவனமும் இணைந்து தற்போது நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## 100 தமிழர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்)
யாற்றி வந்தனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆம் திகதி அதிகாலை 4-00 மணியளவில் இரத்தினபுரி நகருக்கு மின்சாரத்தை வழங்கும் அம்பக ஹயட வட்டச் சுற்றில் அமைந்துள்ள 53 ஆயிரம் கிலோ வோட் மின்சாரத்தை பரிமாற்றம் செய்யும் மின்மாற்றி தகர்க்கப்பட்டது. இச்சம்பவத்திற்கு முன்னரும் இரத்தினபுரி மாவட்டத்தில் மின்மாற்றி தகர்ப்புக்கள், தொலைத் தொடர்பு நிலைய தகர்ப்பு முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. (இ-10)


## கலைவட்டம்

யாழ். பல்கலைக்கழகம்

கருத்தரங்குத் தொடர்

### கலந்துரையாடல் அரங்கும்
அதன்
### செயல்முறைப் பிரச்சினைகளும்

செல்வி இ. ஜெயரஞ்சினி
(நுண்கலைத் துறை)

24-06-98 மாலை 3-00 மணி

முகாமைத்துவ மண்டபம்.

நாடகமும் அரங்கியலும் — உயர்தர, பல்கலைக்கழக மாணவர்களும் ஆர்வமுள்ளவர்களும் கலந்து கொள்ளவும்.

— செயலாளர்

(57067)


## OBITUARY

### Mrs. Selvaranee Durairatnam
(Nee Chelliah)

Mrs.Selvaranee Durairatnam of No.8, Clock Tower Road, Jaffna passed away in Surrey, on 16 th of June 1998. Funeral took place in Surrey on 20 th of June 1998. beloved wife of Dr. M Durairatnam (Emeritus Professor - University of Nattal (Brazil), former Research officer Ocenography, Ministry of Fisheries Colombo), beloved mother of Arunthathy, Daughter of Mr. Mrs. R Chelliah of No. 8, Clock Tower Road, Jaffna, Daughter - in Law of Mr.Mrs. M Muthutahmby (Malasiyan Pensioner) of Temple Road, Kokuvil, Loving sister of Late Kamalambikai, Leela, Late Anantharajah, Mamalar Dharmarajah (Surrey), Thurairatnam (Paranthan Chemicals), Thirunavatkarasu, Late Padmini Kanthakumaran and Karunanithy.

All relations, friends are kindly requested to accept this obituary notice.

Informant:
C. Thirunavatkarasu,
No. 23, 4th Cross Street,
Jaffna.

Dr M. Durairatnam,
No. 10. Appleton Square,
Western Road, Mitchan,
Surrey CR 43 SF,
London

(57064)

## உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)
வவுனியாவில் இருந்து மன்னாருக்கோ அல்லது இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கோ செல்வதற்கு தற்காலிக தடை விதிக்கப் பட்டுள்ளது. அதேபோல இப்பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு வருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அவசர அலுவல்களின் பொருட்டு வவுனியாவிலிருந்து மன்னார் செல்பவர்கள் மன்னாரிலுள்ள வை. எம். சி. ஏ. கட்டடத்தில் ஐந்து நாள்கள் தங்கவைக்கப் படடு அவர்களுக்கு வாந்திபேதி நோயின் தாக்கம் இல்லை எனக் கண்ட பின்னரே அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர்.

நேற்று மன்னார் செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-164-9)

## வாகரைப்...

(முதலாம் பக்கத்தொடர்)
னோர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது.'

இராணுவத் தரப்பில் ஒருவர் பலியானார்; 4 படையினர் காயமடைந்தனர்.

''வாகரைப் பகுதி படையினரால் கைப்பற்றப்பட்டிருப்பதனால் வடக்குக்கும்— கிழக்குக்கும் இடையே விடுதலைப் புலிகளின் கடல் மூலமான நடமாட்டத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளது''

இவ்வாறு படைத்தரப்பு அறிவிப்பு மேலும் தெரிவித்தது.

இராணுவச் செய்திகளுக்கான தணிக்கை காரணமாக இந்த நடவடிக்கை சம்பந்தமாக புலிகள் தரப்பு கருத்துக்களையோ, சுயாதீனத் தகவல்களையோ பெற்று பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப் படவில்லை. (உ-9)

## நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்)
கள் வாடுகின்றனர். கடற்றொழிலாளர்கடலில் இறங்க முடியாது கெடுபிடி வேறு. இவ்வாறு குடாநாட்டின் ஒவ்வொரு குடும்பமும் வேலையிழந்து ஏதோ ஒருவகையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் நிவாரணத்தை வெட்டும் கொடூர நடவடிக்கையை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது— இவ்வாறு டக்ளஸ் தேவானந்தா நேற்று 'உதயன்' கொழும்புச் செய்தியாளருக்குத் தெரிவித்தார். (உ-1)

# தொண்டர் ஆசிரியருக்கு விசேட போட்டிப் பரீட்சை?

## நிரந்தர சேவையில் சேர்க்க

கொழும்பு, ஜூன் 23
யாழ் மாவட்டத்தில் நீண்டகாலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றுவோரையும் —

ஆசிரிய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய சமயம் விண்ணப்பத்தில் தமது பிரதேச செயலாளர் பிரிவை தவறாகக் குறிப்பிட்டதால் பாதிக்கப்பட்டோரையும் —

ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்காக விசேட போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படும்.

நேற்று கொழும்பில் கல்வி அமைச்சில் நடைபெற்ற முக்கிய சந்திப்பு ஒன்றில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கல்வி, உயர்கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் யாழ். மாவட்ட எம். பியும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, அக்கட்சியின் பேச்சாளர் எஸ். தவ்ராஜா ஆகியோர் இச் சந்திப்பில் பங்கு பற்றினர்.

குடாநாட்டில் நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிவோர் மற்றும் ஆசிரிய போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் தமது கிராம சேவையாளர் பிரிவு அல்லது பிரதேச செயலர் பிரிவை மாறி விண்ணப்பித்ததால் பாதிப்புற்றோரின் நிலைமை குறித்து டக்ளஸ் தேவானந்தா இச்சந்திப்பின்போது எடுத்துரைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனை அடுத்தேஇந்தஇருசாராரையும் ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்கு விசேட போட்டிப் பரீட்சை ஒன்று நடத்துவது எனமுடிவு செய்யப்பட்டது.

சுமார் ஐந்நூறு பேர் இவ்வாறு சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என எதிர்பார்க்கப்படுவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்கும் நடவடிக்கை தனியாக நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்)
அலுவலர் ஒன்றியமும் ஆதரவு தெரிவித்துள்ளன.

நீர், மின் விநியோகம், பாதுகாப்பு போன்ற அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் இன்றைய வேலை நிறுத்தத்தால் முற்றாக ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)
இருந்த சிப்பாய் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தார் என்பதையும்—

அந்தச் சிப்பாய் அண்மையில் வவுனியாவில் ஒரு வீடு எடுத்து இப்பெண்ணை அங்கு தங்கவைத்திருந்தார் என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

தற்போது அந்தச்சிப்பாய் தலைமறைவாகியுள்ளார்,

மரணவிசாரணை நடத்திய நீதிவான் இப்பெண்ணின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். சம்பந்தப்பட்ட சிப்பாயை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-9-164)

## யாழ். குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)
சேகரன் (வண்ணார் பண்ணை).

★ சியாமணி பாலசிங்கம் (வண்ணார்பண்ணை).

★ கல்பனா பாலசிங்கம் (வண்ணார்பண்ணை).

★ கனகரட்ணம் ரட்ண சிவாநந்தம் (வியாபாரி மூலை).

★ கணபதிப்பிள்ளை சுபாஸ்கரன் (மானிப்பாய்).

★ தம்புரட்ணம்(மூளாய்.

★ செல்வராசா பத்மராஜா (கொக்குவில்)

விளக்கமறியலில் வைக்கப் பட்ட மூவரின் விவரம் வருமாறு:-

★ தம்பிராசா பத்மநாதன் (கொக்குவில்)

★ கந்தையா கருணாகரன் (சுன்னாகம்)

★ எலியாஸ் ஜெனோவா (வெற்றிலைக்கேணி)

மனித கௌரவத்துக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குடாநாட்டில் கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் காங்கேசன்துறையில் இருந்து களுத்துறைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். (ஐ-1-9)

## கௌரவிப்பு

நவாலி பிரம்மஸ்ரீ விசுவநாதக்குருக்களை காரைநகர் மக்கள் சார்பில் பொற்கிழி வழங்கி பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் காரைநகர் புளியங்குளம் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் முன்னாள் சுங்கத் திணைக்கள ஆணையாளர் கே. கே. சுப்பிரமணியம், ஆலய அறங்காவலர் க. சண்முகநாதன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கினார்கள்.

## மகப்பேற்று...

(முதலாம் பக்கத் தொடர்)
யாழ். போதனா வைத்திய சாலைப்பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் தலைமையில் நடந்த திறப்பு விழா நிகழ்வில் வைத்திய சாலை அதிகாரிகள், டாக்டர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

கட்டடத் திணைக்களத்தால் முழுவதுமாகப் புனரமைக்கப்பட்ட இந்த மகப்பேற்று வார்ட் நேற்று முதல் இயங்கத் தொடங்கியது.

யாழ். போதனா ஆஸ்பத்திரி மருந்துக் களஞ்சியமும் உள்ளக மருந்தகமும் புனரமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டன. (ஐ-15-139)

## கஷ்ட...

(முதலாம் பக்கத் தொடர்)
கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அச்சந்திப்பின் போதே கஷ்ட நிவாரணப் படியை வழங்க மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் திலகரட்ணா இணக்கம்தெரிவித்ததாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் அன்ரூ டிசில்வா உட்பட அமைச்சு அதிகாரிகள் பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச திணைக்களங்களின் ஊழியருக்கு மட்டுமே கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் பல்கலைக்கழகங்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன. ஆயினும் பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் கஷ்ட நிவாரணப் படி வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சிடம் கோரியுள்ளோம். அமைச்சின் அதிகாரபூர்வ அங்கீகாரம் கிடைத்ததும் யாழ். பல்கலைக்கழக ஊழியருக்கும் கஷ்ட நிவாரணப் படியை வழங்க முடியும். மானிய ஆணைக்குழுவிடம் போதிய நிதி உள்ளது. எனவே அனுமதிகிடைத்ததும் இந்த நிவாரணப்படியை வழங்க முடியும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகள் உறுதியளித்ததாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-1-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 23-06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org